**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**CC.No. 410/2022**

**PW - 3**

| | | |
|---|---|---|
| **PW. 3 Cross** | பாப்பாத்தி க/பெ.பழனிசாமி | 20.01.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 20.01.2025

**(எதிரிகள் ஆஜர்)**

எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய கு.வி.மு.ச பிரிவு 311 –ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு MP.No.2/2024 –ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் சாட்சியை அழைக்கப்பட்டு செய்யப்படும் குறுக்கு விசாரணை –

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 01.27 மணி**

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :–**

1) இவ்வழக்கின் 1ம் எதிரி பழனிசாமி மற்றும் அவர் மனைவி சாந்தியை ஆகியோரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். சாந்தி என்பவர் எனது கோழிப்பண்ணையில் வேலை பார்த்துவந்தார் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக வேலை பார்த்தார் என்றால் 7 வருடமாக வேலை பார்த்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பு எத்தனை ஆண்டுகளாக வேலைக்கு வரவில்லை என்றால் 4, 5 மாதங்களுக்கு முன்பே வேலையை விட்டு நின்றுவிட்டார். சாந்தி என்பவருக்கும், எங்களுக்கும் வேலைபார்த்தவகையில் பணவரவு செலவு இருந்து வந்தது என்ற சொன்னால் சரிதான், ஆனால் முடித்துக்கொண்டோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் சரிதான்.

2) சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் சமயத்தில் சம்பவயிடத்தில் சுமாராக எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள், நடந்த பின்னர் தான் மற்றவர்கள் ஓடிவந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், நான் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 500 மீ இருக்கும். சம்பவத்தை கேள்விப்பட்டு நாமக்கல் அரசு மருத்துவனைக்கு எனது மகனையும், எனது கணவரையும் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். எனது கணவர் மீதும், எனது மகன் மீதும் சாந்தி என்பவர் வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றாலும், அதன் மீது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் கு.எண்.46/2022 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

3) மேற்படி எனது கணவர் மற்றும் மகன் மீது கொடுத்திருந்த வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக என் கணவர் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், எதிரிகள் எந்த குற்றசெயல்களிலும் ஈடுபடவில்லை என்றுசொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 01.34 மணி )